பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 21

முன்னுரை / 24

நற்பலன் 1: ஹிக்மத் ஓர் அருட்கொடை / 28

நற்பலன் 2: ஹிக்மத்தை அடையும் காரணிகளை அணுகுதல் / 29

நற்பலன் 3: அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துதல் / 31

நற்பலன் 4: எல்லா வழிகளிலும் நன்றிசெலுத்துதல் / 32

நற்பலன் 5: நன்றி மறுப்பது நமக்குத்தான் தீங்கு / 33

நற்பலன் 6: நன்றி செலுத்தல் நமக்குத்தான் நன்மை / 35

நற்பலன் 7: அல்லாஹ் தன்னிறைவானவன்; தேவையற்றவன் / 36

நற்பலன் 8: அல்லாஹ்வே புகழுக்குரியவன் / 38

நற்பலன் 9: அல்லாஹ்வின் பிரியத்திற்குரியவருக்கே ஹிக்மத்! / 39

நற்பலன் 10: உபதேசத்தின் தேவை / 40

நற்பலன் 11: அன்பின் வழியில் உபதேசம் / 41

நற்பலன் 12: முன்னுரிமை தரப்படுவது முதலில் இருக்கட்டும் / 43

நற்பலன் 13: இணைவைப்புதான் முதல் அபாயம் / 44

நற்பலன் 14: குழந்தைகளுக்கு முதலில் தவ்ஹீதையும் இக்லாஸையும் போதித்தல் / 45

நற்பலன் 15: இணைவைப்புதான் மிகப் பெரிய அநியாயம் / 47

நற்பலன் 16: அல்லாஹ்வின் ஏவல், விலக்கலின் முக்கியத்துவத்தை உணர்த்துதல் / 48

நற்பலன் 17: பெற்றோருக்கு உபகாரம் செய்தல் / 49

நற்பலன் 18: பெற்றோரால் அடைந்த பேரருள் / 50

நற்பலன் 19: உபகாரங்களின் வழியாக அல்லாஹ்வின்பால் திரும்புதல் / 51

நற்பலன் 20: மனிதர்களில் முதலில் நன்றிக்குரியவர் தாய்தான் / 51

நற்பலன் 21: தாய்க்கு நிகராக அவருக்கு உபகாரம் செய்ய முடியாது / 53

நற்பலன் 22: அல்லாஹ்வுக்கு அடுத்து பெற்றோருக்கே முன்னுரிமை / 53

நற்பலன் 23: பெற்றோருக்கு நன்றிசெலுத்தலின் பல வழிமுறைகள் / 53

நற்பலன் 24: பெற்றோரை துன்புறுத்துவது பெரும் பாவம் / 54
நற்பலன் 25: பெற்றோர் பாவிகளாக இருப்பினும்
நல்லவிதமாகவே நடத்துதல் / 54
நற்பலன் 26: பெற்றோராக இருந்தாலும் பாவத்திற்கு
உடன்படக் கூடாது / 55
நற்பலன் 27: படைப்பாளனுக்கு மாறுசெய்து படைப்புகளுக்குக்
கீழ்ப்படியக் கூடாது / 55
நற்பலன் 28: வழிகேடர்களும் தங்கள் வழிகேடுகளின்பால் அழைப்பதில்
மும்முரமாக இருப்பார்கள் / 56
நற்பலன் 29: பாவத்தில் கட்டுப்படாதீர்கள் என்றால்
வரம்புமீறுங்கள் என்பதல்ல / 56
நற்பலன் 30: நபித்தோழர்களின் சிறப்பும் உயர்வும் / 57
நற்பலன் 31: நல்லோருடன் சேர்ந்து அமர்தல் / 58
நற்பலன் 32: அல்லாஹ்வின்பால் திரும்புவதின் விளக்கம் / 59
நற்பலன் 33: மறுமையில் அனைத்தும் கணக்கில் வரும் / 60
நற்பலன் 34: இணைவைப்புக்கு எந்த அடிப்படையும் இல்லை / 60
நற்பலன் 35: அனைத்தும் அல்லாஹ்வை நோக்கித்
திரும்பியே ஆகவேண்டும் / 61
நற்பலன் 36: அல்லாஹ்வுக்கு எதுவும் மறைந்ததல்ல / 62
நற்பலன் 37: அல்லாஹ்வின் பெயர்கள் பண்புகளை நினைவுகூர்தல் / 62
நற்பலன் 38: அல்லாஹ்வின் கண்காணிப்பை மனதில் நிறுத்துதல் / 63
நற்பலன் 39: மறுமையில் அனைத்தும் எடைபோடப்படும் / 63
நற்பலன் 40: சின்ன விசயமும் மறுமையில் விசாரிக்கப்படும் / 64
நற்பலன் 41: அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன் / 64
நற்பலன் 42: தொழுகையின் முக்கியத்துவம் / 65
நற்பலன் 43: நன்மையை ஏவ, தீமையைத் தடுக்க
சிறுவயதிலிருந்தே பயிற்சி / 66
நற்பலன் 44: பொறுமையின் முக்கியத்துவம் / 67
நற்பலன் 45: மன உறுதியின் முக்கியத்துவம் / 67
நற்பலன் 46: தற்பெருமையும் ஆணவமும் இழிவு / 67
நற்பலன் 47: நீதிமும் சமநிலையும் முக்கியம் / 68
நற்பலன் 48: அல்லாஹ்வின் அன்பு முக்கியம் / 68
நற்பலன் 49: நற்குணங்களின் முக்கியத்துவம் / 68
நற்பலன் 50: கற்பித்தலில் உதாரணங்களைக் கூறும் வழிமுறை / 68

கூறியிருக்கிறேன். இவற்றை அல்லாஹ் நமக்குப் பயனுள்ளதாக ஆக்க வேண்டும் என்று ஆதரவு வைக்கிறேன். நுட்பங்கள் நிறைந்த இந்த அறிவுரைகளிலிருந்து நற்பயன்களைப் பெற்றிட அல்லாஹ் நம்மனைவருக்கும் நல்லுதவி புரிவானாக. ஆமீன்.

۞ நற்பலன் ஒன்று ۞
ஹிக்மத் ஓர் அருட்கொடை

ஹிக்மத் எனும் நுண்ணறிவு அல்லாஹ் தரும் அருட்கொடைகளில் ஒன்று. தான் விரும்பிய அடியார்களுக்கு அவன் இதை அன்பளிப்பாக அள்ளித் தருகிறான். இது

وَلَقَدْ آتَيْنَا لُقْمَانَ الْحِكْمَةَ

லுக்மானுக்கு நாம் ஞானத்தைக் கொடுத்து... *(குர்ஆன் 31:12)*

என்ற வான்மறை வசனத்திலிருந்து பெறப்பட்ட கருத்தாக்கமாகும். இதே கருத்தை

يُؤْتِي الْحِكْمَةَ مَنْ يَشَاءُ وَمَنْ يُؤْتَ الْحِكْمَةَ فَقَدْ أُوتِيَ خَيْرًا كَثِيرًا

(அல்லாஹ்) தான் விரும்பியவர்களுக்கே (இஸ்லாம் பற்றிய நுட்பமான அறிவை) ஹிக்மாவைக் கொடுக்கின்றான். ஆகவே, எவர் ஹிக்மாவைக் கொடுக்கப் பெறுகின்றாரோ அவர் நிச்சயமாகப் பல நன்மைகளைப் பெற்றுவிடுவார். (குர்ஆன் 2:269)

என்ற வசனமும் வலியுறுத்திக் கூறுகிறது. தனக்கும் நுண்ணறிவு வேண்டும் என்று விரும்புபவர் அதை அல்லாஹ்விடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில், நல்லவையும், நற்சிறப்புகளும் அல்லாஹ்வின் கரத்தில்தான் இருக்கின்றன. அவற்றை அவன் தான் நாடியவர்களுக்கு வாரி வழங்குகிறான். அவனே அருளாளனாகவும் உயர்ந்தவனாகவும் இருக்கிறான்.

அல்லாஹ்வுடன் உண்மையாக நடந்துகொள்ளாமல், அவனை முன்னோக்கி அழகிய முறையில் அடியெடுத்து வைக்காமல், அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்காமல், அவனது பேருதவியைத் தேடாமல், அதைத் தேடி அவனின் பக்கம் ஒதுங்காமல் அவனது நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெ

۞ நற்பலன் மூன்று ۞
அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துதல்

அல்லாஹ் நமக்கு அளித்துள்ள அருட்கொடைகளுக்கும், அவை நம்மிடம் வெளிப்பட்டுக்கொண்டிருப்பதற்கும், அவை தொடர்ந்து கிடைப்பதற்கும், நீடித்து நிலைத்திருப்பதற்கும், அவை அதிகரிப்பதற்கும் நாம் செய்ய வேண்டிய மூக்கியமான அமல் அவற்றுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதுதான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَقَدْ آتَيْنَا لُقْمَانَ الْحِكْمَةَ أَنِ اشْكُرْ لِلَّهِ

லுக்மானுக்கு நாம் ஞானத்தைக் கொடுத்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும்படிக் கூறினோம். (குர்ஆன் 31:12)

நன்றி செலுத்தினால் இறையருள் நிலைத்திருக்கும். நன்றி செய்யாவிட்டால் இறையருள் இல்லாமலாகிவிடும். இதனால் தான் பேரறிஞர்களில் சிலர் இந்த நன்றியை ஹாஃபிள் (الْحَافِظ) - பாதுகாப்பளிப்பது என்றும், ஜாலிப் (الْجَالِب) - நன்மையை இழுத்துவரக்கூடியது என்றும் பெயர் சூட்டியுள்ளனர். ஏனெனில், இந்த நன்றிதான் நம்மிடம் இருந்துகொண்டிருக் கின்ற இறையருள்களைப் பாதுகாக்கிறது. இதுவரை இல்லாத இறையருள்களை இழுத்துக்கொண்டுவரவும் செய்கிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ

உங்கள் இறைவன் (உங்களை நோக்கி, 'இதற்காக) நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் (நான் என்னுடைய அருளை மேன்மேலும்) உங்களுக்கு அதிகப்படுத்துவேன்' என்று அறிவிப்புச் செய்ததையும் (நபியே!) நீர் (அவர்களுக்கு) நினைவுபடுத்துவீராக! (குர்ஆன் 14:7)

மேற்கண்ட 31:12ஆம் வசனத்தில்

أَنِ اشْكُرْ لِلَّهِ

'அல்லாஹ்வுக்கு நீ நன்றி செய்'

எவன் நேரான வழியில் செல்கிறானோ அவன் தன்னுடைய நன்மைக்காகவே நேரான வழியில் செல்கிறான். எவன் தவறான வழியில் செல்கிறானோ அவன் (அதன் மூலமாகத்) தனக்கே தீங்கிழைத்துக்கொள்கிறான். (குர்ஆன் 17:15)

அல்லாஹ் யாவற்றை விட்டும் தேவையற்றவன்.

يَاأَيُّهَا النَّاسُ أَنْتُمُ الْفُقَرَاءُ إِلَى اللَّهِ وَاللَّهُ هُوَ الْغَنِيُّ الْحَمِيدُ إِنْ يَشَأْ يُذْهِبْكُمْ وَيَأْتِ بِخَلْقٍ جَدِيدٍ

மனிதர்களே! நீங்கள் அனைரும் (எந்நேரத்திலும்) அல்லாஹ்வுடைய உதவி தேவைப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள். அல்லாஹ்வோ (உங்களுடைய) தேவையற்றவனும் புகழுக்குரியவனுமாக இருக்கின்றான். அவன் நாடினால் உங்களை அழித்து மற்றொரு புதிய படைப்பைக்கொண்டு வந்துவிடுவான். (குர்ஆன் 35:15,16)

۞ நற்பலன் ஆறு ۞

நன்றி செலுத்தல் நமக்குத்தான் நன்மை

அடியான் செய்யும் எந்த ஒரு நன்றியும் மீண்டும் அவனுக்குத் தான் அது பயனளிக்கும்.

وَمَنْ يَشْكُرْ فَإِنَّمَا يَشْكُرُ لِنَفْسِهِ

எவர் நன்றி செலுத்துகிறாரோ அவர் தம் நன்மைக்காகவே நன்றி செலுத்துகிறார். (குர்ஆன் 31:12)

அடியான் செய்யும் எந்த ஒரு நன்றியும் மீண்டும் அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் திரும்பவரும். அது இம்மையில் அவனுக்கு இறையருள்களைத் தொடர்ந்து கிடைக்கச் செய்யும். மறுமையிலும் அது இறையருள்களை நற்கூலிகளாக, நன்மைகளாக, நல்முடிவுகளாக இழுத்துக்கொண்டு வந்துவிடும். ஒருவன் நன்றி செய்தால் அந்த நன்றி அவனுக்கு அது வேறொரு வழிவகையில் நிச்சயம் மறுபயனாகப் பயனளிக்கும். அல்லாஹ் கூறுகின்றான்:

مَنِ اهْتَدَى فَإِنَّمَا يَهْتَدِي لِنَفْسِهِ وَمَنْ ضَلَّ فَإِنَّمَا يَضِلُّ عَلَيْهَا

✿ நற்பலன் பதினான்கு ✿
குழந்தைகளுக்கு முதலில் தவ்ஹீதையும் இக்லாஸையும் போதித்தல்

சிறுபிள்ளைகளுக்குச் சொல்லப்படும் நற்குணங்களில் மிக முக்கியமனது ஏகத்துவமும், மனத்தூய்மையும், இணை வைத்தலை விட்டும் விலகி இருப்பதுமாகும். இது

يَابُنَيَّ لَا تُشْرِكْ بِاللَّهِ

'என் அருமை மைந்தனே! நீ அல்லாஹ்வுக்கு (ஒன்றையுமே) இணையாக்காதே! (குர்ஆன் 31:13)

என்ற வசனத்திலிருந்து பெறப்பட்ட கருத்தாகும். எனவே, பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே ஷிர்க் விசயத்தில் எச்சரிக்கை செய்யப்பட வேண்டும். ஏகத்துவத்தின் பக்கமும், மனத் தூய்மையின் பக்கமும் அழைக்கப்பட வேண்டும். ஒரு பிள்ளை ஆரம்பம் முதலே தவ்ஹீதைச்[4] சொல்லி வளர்க்கப்பட்டால்

4 இமாம் முஹம்மது ஸாலிஹ் அல்உஸைமீன் ﵀ கூறினார்கள்: அறபுமொழியில் தவ்ஹீது (تَوْحِيدٌ) என்பது ஒரு பெயர்ச்சொல். வஹ்ஹத, யுவஹ்ஹிது (وَحَّدَ يُوَحِّدُ) எனும்வினைச்சொல்லின் வேர்ச்சொல். எதையேனும் ஒன்றாக்குதல் என்று அர்த்தம். ஒன்றை ஒருமைப்படுத்துதல் என்பது மறுத்தல், உறுதிப் படுத்துதல் இரண்டும் இல்லாமல் அமைய முடியாது. ஒரு பொருளை அது ஒன்றே என உறுதிப்படுத்த வேண்டுமானால், அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுக்க வேண்டும். உதாரணமாக, வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர எதுவும் தகுதியானதில்லை என்று மனிதர்கள் சாட்சி கூற வேண்டும். இப்படிக் கூறினால் மட்டுமே தவ்ஹீதின் கருத்தை அவர்கள் முழுமையாக ஏற்றவர்களாக முடியும். இதன் மூலம் அல்லாஹ்வைத் தவிர அனைத்தையும் வணங்குவது மறுக்கப்படுகிறது; வணக்கங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே என்று உறுதிப்படுத்தப்படுகிறது. மறுத்தல் இல்லாமல் ஒன்றை உறுதிப்படுத்தினால், அது முழுமையான உறுதிப்படுத்தல் ஆகாது. மறுக்கப்பட வேண்டியவைக்கு அதில் பங்கிருப்பதற்குச் சாத்தியம் உண்டு. எதை உறுதிப்படுத்த வேண்டுமோ அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுத்தால்தான், உண்மையில் உறுதிப்படுத்துதல் அங்கு நிகழும். உதாரண மாக, 'இன்னார் நின்றுகொண்டிருக்கிறார்' என்று நீங்கள் கூறினால், உண்மை யில் அவர் ஒருவர் மட்டுமே நிற்கிறார் என நீங்கள் உறுதிப்படுத்தியதாக ஆகாது. அந்த நிற்கும் செயலை அவர் மட்டுமே செய்கிறார் என்று

இதனால்தான் தாயை வேதனை செய்வது பாவங்களில் மிகப் பெரிய பாவமாக, மிக மோசமான பழியாக இருக்கிறது. தனக்கு நன்மையும், உபகாரமும், கண்ணியமும் செய்த தாயை வேதனை செய்ய எப்படி ஒருவருக்கு மனம் வருகிறது?

۞ நற்பலன் இருபத்தொன்று ۞
தாய்க்கு நிகராக அவருக்கு உபகாரம் செய்ய முடியாது

ஒருவர் எவ்வளவுதான் நன்மை செய்தாலும் அவரை அவரது தாய் சுமந்த சுமைக்கும், பிரசவித்த சிரமங்களுக்கும் அது என்றென்றும் ஈடாகாது.

۞ நற்பலன் இருபத்திரண்டு ۞
அல்லாஹ்வுக்கு அடுத்து பெற்றோருக்கே முன்னுரிமை

அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமையுடன் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையும் இணைத்துக் கூறப்பட்டிருப்பதிலிருந்தே இந்த இரண்டின் முக்கியத்துவத்தை நாம் அறியமுடிகிறது. அல்லாஹ்வுடைய கடமைகளுக்குப் பின் பெற்றோர்களுக்கு உரிய கடமைதான் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இவ்விரண்டும் இணைத்துக் கூறப்பட்ட வசனங்கள் பல வான்மறையில் வந்துள்ளன.

۞ நற்பலன் இருபத்தி மூன்று ۞
பெற்றோருக்கு நன்றிசெலுத்தலின் பல வழிமுறைகள்

பெற்றோர்களை நேசிப்பது, அவர்களுக்காகப் பிரார்த்திப்பது, நன்மை செய்வது, அவர்களுடன் சேர்ந்து இருப்பது, உபகாரம் செய்வது போன்றவை யாவும் அவர்களுக்குச் செய்யக்கூடிய நன்றியாகும்.

وَإِنْ جَاهَدَاكَ عَلَى أَنْ تُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا

எனினும், (இறைவன் என்று) நீ அறிந்துகொள்ளாத எந்தப் பொருளையேனும் எனக்கு இணைவைத்து வணங்கும்படி அவர்கள் உன்னைக் கட்டாயப்படுத்தினால் (அவ்விசயத்தில்) நீ அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டாம். ஆயினும், இவ்வுலக விசயத்தில் நீ அவர்களுக்கு (நீதியாக) உதவி செய்து (அன்பாக) நேசித்து வா. (குர்ஆன் 31:15)

۞ நற்பலன் இருபத்தெட்டு ۞
வழிகேடர்களும் தங்கள் வழிகேடுகளின்பால் அழைப்பதில் மும்முரமாக இருப்பார்கள்

வழிகெட்டவர்களும், தவறான வழியிலுள்ளவர்களும் தங்களது பொய்களையும், வழிகேடுகளையும் பரப்புவதில், அவற்றின்பக்கம் அழைத்துச் செல்வதில்தான் தமது முயற்சிகளையும், செல்வங்களையும், ஓய்வு நேரங்களையும் இயன்ற வரை செலவு செய்பவர்களாக இருப்பார்கள் என்பதை

وَإِنْ جَاهَدَاكَ

அவர்கள் உன்னைக் கட்டாயப்படுத்தினால் (குர்ஆன் 31:15)

என்ற வசனம் உறுதிப்படுத்துகிறது. சிலநேரங்களில் சத்தியப் பாதையில் இருப்பவர்கள் சோம்பேறிகளாகவும், பொடுபோக்கர்களாகவும் இருப்பதும் எதிராளிகள் வளர்வதற்குக் காரணமாக அமைந்துவிடுவதுண்டு.

۞ நற்பலன் இருபத்தொன்பது ۞
பாவத்தில் கட்டுப்படாதீர்கள் என்றால் வரம்புமீறுங்கள் என்பதல்ல

சிலர் தம் பெற்றோருக்குக் கட்டுப்படுவது இல்லை, நோவினைப்படுத்துவதும் இல்லை. சிலர் இரண்டையும் சரிசமமாகச் செய்வதும் உண்டு. இரண்டுக்கும் இடையில் பெருத்த

கிடைப்பதைவிடச் சிறந்ததாகும். (அறிவிப்பு: ஸஹ்ல் இப்னு ஸஅத் ﷺ, புகாரீ 3009)

۞ நற்பலன் நாற்பத்தி நான்கு ۞
பொறுமையின் முக்கியத்துவம்

பொறுமையாக இருக்க உபதேசம் செய்வது முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக, நன்மை ஏவி, தீமையைத் தடுப்பவர் களுக்குப் பொறுமை மிகமிக முக்கியமான ஒன்று. அல்லாஹ் கூறுகின்றான்:

وَاصْبِرْ عَلَىٰ مَا أَصَابَكَ إِنَّ ذَٰلِكَ مِنْ عَزْمِ الْأُمُورِ

உனக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் நீ சகித்துக்கொள். நிச்சயமாக இது எல்லாச் செயல்களிலும் வீரமிக்கச் செயலாகும். (குர்ஆன் 31:17)

۞ நற்பலன் நாற்பத்தி ஐந்து ۞
மன உறுதியின் முக்கியத்துவம்

காரியங்களில் மன உறுதியோடு இருப்பதும் முக்கியமான ஒன்று. இது பெரிய உள்ளம் படைத்தவர்களுக்குத்தான் சாத்தியப்படும் ஒன்றாகும்.

۞ நற்பலன் நாற்பத்தி ஆறு ۞
தற்பெருமையும் ஆணவமும் இழிவு

தற்பெருமை, ஆணவம் போன்றவற்றில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

إِنَّ اللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ

நிச்சயமாகக் கர்வம்கொண்டு பெருமையடிக்கின்ற எவரையும் அல்லாஹ் நேசிக்கமாட்டான். (குர்ஆன் 31:18)

இந்த வசனத்தில் வந்துள்ள முக்தால் (مُخْتَالٍ) என்பதற்குத் தற் பெருமை அடிப்பது என்றும், ஃபகூர் (فَخُورٍ) என்பதற்குத் தம்பட்டம் அடிப்பது என்றும் பொருள் என இமாம் இப்னு கஸீர் ﷺ தமது விரிவுரையில் கூறி உள்ளார்கள். (தஃப்சீர் இப்னு கஸீர் 6/339)

۞ நற்பலன் நாற்பத்தி ஏழு ۞
நீதிமும் சமநிலையும் முக்கியம்

நீதமான, சமநிலையான பாதையின் பக்கம் அனைவரையும் அழைக்க வேண்டும்:

وَاقْصِدْ فِي مَشْيِكَ وَاغْضُضْ مِنْ صَوْتِكَ إِنَّ أَنْكَرَ الْأَصْوَاتِ لَصَوْتُ الْحَمِيرِ

உன் நடையில் (பெருமையும் கர்வமுமின்றி) நடுநிலையை விரும்பு. உன் சப்தத்தையும் தாழ்த்திக்கொள். ஏனென்றால், சப்தங்களிலெல்லாம் மிக்க வெறுக்கத்தக்கது கழுதையின் (உரத்த) சப்தமே!' (குர்ஆன் 31:19)

۞ நற்பலன் நாற்பத்தி எட்டு ۞
அல்லாஹ்வின் அன்பு முக்கியம்

அல்லாஹ்வின் அன்பைப் பெறுபவர்களாக நம்மை கட்டமைத்துக்கொள்ள வேண்டும்:

إِنَّ اللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ

நிச்சயமாகக் கர்வம்கொண்டு பெருமையடிக்கின்ற எவரையும் அல்லாஹ் நேசிக்கமாட்டான். (குர்ஆன் 31:18)

۞ நற்பலன் நாற்பத்தி ஒன்பது ۞
நற்குணங்களின் முக்கியத்துவம்

ஷரீஅத் கூறியுள்ளபடி நற்குணங்களின் பக்கம் அழைப்பும், தீய குணங்களில் எச்சரிக்கையும் செய்ய வேண்டும்.

۞ நற்பலன் ஐம்பது ۞
கற்பித்தலில் உதாரணங்களைக் கூறும் வழிமுறை

உதாரணங்களைக் கூறி கல்வி கற்றுக் கொடுப்பது மூக்கியமான ஒன்றாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَاغْضُضْ مِنْ صَوْتِكَ إِنَّ أَنْكَرَ الْأَصْوَاتِ لَصَوْتُ الْحَمِيرِ

உன் சப்தத்தையும் தாழ்த்திக்கொள். ஏனென்றால், சப்தங்களிலெல்லாம் மிக்க வெறுக்கத்தக்கது கழுதையின் (உரத்த) சப்தமே!' (குர்ஆன் 31:19)